විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓய்வு/சுற்றுநிருபம்/2011 දිනය / திகதி / Date 04.07.2011

ஓய்வூதியச் சுற்றுநிருபம்: 6/2011

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/பிரதேச செயலாளர்கள்.

## ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் "ட" உப அட்டவணையினை வரைவிலக்கணப்படுத்தல்

25.05.2010 ஆந் திகதி என்னால் வெளியிடப்பட்ட ஓய்வூதியத் திணைக்களச் சுற்றுநிருப இலக்கம் 5/2010 சுற்றுநிருபத்தினை இரத்துச் செய்யும் வண்ணம் இச் சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகின்றன. அதன்படி 13.05.2011 ஆந் திகதி கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் பதவிகள் "ட" உப அட்டவணையில் உள்ளடக்கப்படும்.

1. அதிமேதகு சனாதிபதியின் அலுவலர் குழாம்

   அந்தரங்க செயலாளர் / தகவற் செயலாளர் / உதவிச் செயலாளர் (தகவல்)/ மேலதிக அந்தரங்க செயலாளர் / ஊடகச் செயலாளர் / சனாதிபதி செயலாளரின் அந்தரங்க உதவியாளர் / மக்கட் தொடர்பீட்டு அதிகாரி.

2. கௌரவ பிரதமரின் அலுவலர் குழாம்

   அந்தரங்க செயலாளர் / இணைப்பீட்டுச் செயலாளர் / மக்கட் தொடர்பீட்டு அதிகாரி / ஊடகச் செயலாளர்.

3. கௌரவ சபாநாயகரின் அலுவலர் குழாம்

   அந்தரங்க செயலாளர் / இணைப்பீட்டுச் செயலாளர் / மக்கட் தொடர்பீட்டு அதிகாரி / ஊடகச் செயலாளர்.

4. கௌரவ அமைச்சரவை அமைச்சர்களின் அலுவலர் குழாம்

   அந்தரங்க செயலாளர் / இணைப்பீட்டுச் செயலாளர் / மக்கட் தொடர்பீட்டு அதிகாரி / ஊடகச் செயலாளர்.

5. கௌரவ எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலர் குழாம்

   அந்தரங்க செயலாளர் / இணைப்பீட்டுச் செயலாளர் / மக்கட் தொடர்பீட்டு அதிகாரி / ஊடகச் செயலாளர்.


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346. | 2432214 | Policy | 2329580 | |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 | |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 | E-mail: pensions@sltnet.lk |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 | Web site: www.pensions.gov.lk |

6. கௌரவ பிரதி அமைச்சர்களின் அலுவலர் குழாம்

அந்தரங்க செயலாளர்/ இணைப்பீட்டுச் செயலாளர்/ மக்கட் தொடர்பீட்டு அதிகாரி / ஊடகச் செயலாளர்.

7. கௌரவ பிரதி சபாநாயகரின் அலுவலர் குழாம்

அந்தரங்க செயலாளர்/ இணைப்பீட்டுச் செயலாளர்/ மக்கட் தொடர்பீட்டு அதிகாரி / ஊடகச் செயலாளர்.

8. கௌரவ குழுக்களின் பிரதித் தலைவரின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/ இணைப்பீட்டுச் செயலாளர்/ மக்கட் தொடர்பீட்டு அதிகாரி / ஊடகச் செயலாளர்.

9. கௌரவ திட்ட அமைச்சர்கள்/ மாவட்ட அமைச்சர்கள்/ இராஜாங்க அமைச்சர்களின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர் (முன்பிருந்த அலுவலர் குழாம்களுக்கு மட்டும்)

10. அமைச்சரவை அமைச்சுச் செயலாளரொருவரின் இணைப்பீட்டுச் செயலாளர்/ மாகாண சபை பிரதம செயலாளரொருவரின் இணைப்பீட்டுச் செயலாளர் / திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இணைப்பீட்டுச் செயலாளர்.
அமைச்சரவை அமைச்சுக்களின் சிரேட்ட உதவிச் செயலாளர் (தகவல்)
(தற்போது இப்பதவி வழக்கொழிந்துள்ளது. முன்பு ஈடுபட்டிருந்தவர்களுக்கு மட்டும்)

2011 வைகாசி மாதம் 13 ஆம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இலக்கம் 1706 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலின் படி கௌரவ பிரதமரின் இணைப்பீட்டுச் செயலாளர், மக்கட் தொடர்பீட்டு அதிகாரி பதவிகள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து ஊடகச் செயலாளர் பதவிகளும் 24.04.2010 ஆம் திகதி முதல் அட்டவணைப்படுத்தப்படுவதுடன் அவர்களுக்கும் இங்கு குறிப்பிடப்படும் அனைத்து விதிமுறைகளும் ஏற்புடையனவாகும்.

மேற்குறித்த பதவிகள் ஓய்வூதியம் கொண்டவையாயினும், இல்லையாயினும், பதவியின் நிரந்தரத் தன்மையினைக் கருத்திற் கொள்ளாது 05 வருட சேவைக்காலத்தினைப் பூரணப்படுத்தி இருப்பின் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 மற்றும் "அ ஆ" வாசகங்களின் கீழ் ஓய்வூதியமொன்றிற்கு மட்டும் உரித்துண்டு. இவ்வதிகாரிகளுக்கு 05 வருட சேவைக்காலத்திற்காக அவர்கள் இறுதியாகப் பெற்ற சம்பளத்தின் 1/3 ஓய்வூதியமாகக் கிடைப்பதுடன், 15 வருட கால சேவைக்காலத்தினைப் பூரணப்படுத்தி இருப்பின் இறுதியாகப் பெற்ற சம்பளத்தின் 2/3 ஓய்வூதியமாகக் கிடைக்கும். (பணிக்கொடை இன்றி). இவ் "ட" உப அட்டவணையில் குறிப்பிடப்படும் பதவிகளுக்கான ஓய்வூதிய உரித்துக்கள் தொடர்பில் கீழ்வருமாறு கருமமாற்றுதல் வேண்டும்.

1. கௌரவ அமைச்சர்களின் அலுவலர் குழாம்களில் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களின் ஊதியத்திலிருந்து அரச சேவை சேமலாப நிதி அறவிடப்படுதல் வேண்டும். ஓய்வூதிய உரித்திற்கான அதிகுறைந்த சேவைக்காலம் (அதாவது எவ்விதமானதோர் சேவை உடைப்பு காணப்படினும் அவற்றினைக் கவனத்திற் கொள்ளாது) 05 வருடங்கள் இருத்தல் வேண்டும்.

2. அரச சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர ஓய்வூதிய உரித்துள்ள அதிகாரிகள், அமைச்சர்களுடைய அலுவலர் குழாம் பதவிகளில் கடமையாற்றுவதற்காக அரச சேவையில் இருந்து விடுவிக்கப்பட்டிருப்பின் அவ்வாறானதோர் அதிகாரியிடமிருந்து "ட" உப அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிக்குரிய சேவைக்காலத்தினுள் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புப் பணமே அறிவிடப்படுதல் வேண்டும். அவ்வாறான அதிகாரிகள் 05 வருடங்களைப் பூரணப்படுத்தியிருக்கையில் "ட" உப அட்டவணையின் கீழ் ஓய்வு பெறச் செய்தல் அல்லது மீண்டும் அரச சேவைப் பதவிக்குச் செல்ல இயல்வதுடன், 05 வருடங்களுக்குக் குறைவான சேவைக்காலம் காணப்படின் மீண்டும் அரச சேவைக்குச் செல்லுதல் வேண்டும்.

3. “ட” உப அட்டவணையின் கீழ் ஓய்வூதியமொன்றிற்கு உரித்துப் பெறும் அதிகாரிகளின் ஓய்வூதியம் கொண்ட முன்னைய சேவைக் காலத்தினை மட்டும் ஓய்வூதியக் கணிப்பீட்டிற்காக ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியும்.

4. ஓய்வு பெற்ற அரச அதிகாரிகள் கௌரவ அமைச்சர்களின் அலுவலர் குழாம்களில் பதவி வகிக்கையில் அவர்களிடமிருந்து விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புப் பணம் அல்லது அரச சேவை சேமலாபப் நிதியப் பங்களிப்புப் பணம் அறவிடுதல் கூடாது (அரச சேவை சேலாப நிதியத்துடன் தொடர்புடைய குறித்த அறிவுறுத்தல்கள் ஓய்வூதியச் சுற்றுநிருபம் 4/2010 இல் உள்ளடங்கியுள்ளன).

ஓய்வூதியச் சுற்றுநிருபம் 15/2009 இன் கீழான சலுகைகள் இவ்வதிகாரிகளுக்கு உரித்தற்றதாவதுடன், ஓய்வூதியத்தினைத் திருத்தியமைப்பதெனில் மீண்டும் 05 வருட சேவைக்காலத்தினைப் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். “ட” உப அட்டவணைப்படுத்தப்பட்ட அதிகாரியொருவரின் ஓய்வூதியத்தினைத் தயாரிக்கையில் அவர் இறுதியாக குறித்த பதவியில் கடமை புரிந்த அமைச்சுச் செயலாளரினால் கீழ்வரும் இணைப்புக்களுடன் ஓய்வூதியக் கோவையினைத் தயாரித்து இத்திணைக்களத்திடத்தே அனுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- I. பொது 55 விண்ணப்பப்படிவம்
- II. “ட” உப அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிக்குரிய நியமனக் கடிதம்.
- III. வரலாற்றுத்தாள்.
  (இவ் ஆவணங்கள் அதிகாரம் பெற்ற அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)
- IV. வருடாந்தம் மீளவும் சேவையில் ஈடுபடுத்திய நியமனக் கடிதம்.
- V. சேவை முடிவுறுத்தற் கடிதம்.
- VI. 3 ¼, 2 ¼ அளவிலான 03 கறுப்பு வெள்ளைப் நிழற்படங்கள்.
- VII. அரச சேவை சேமலாப நிதிய அனுகூலங்களைப் பெற்றுக் கொண்ட விபரங்கள்.
- VIII. தற்போது ஓய்வூதியம் பெறும் பிரதேச செயலகம் மற்றும் ஓய்வூதிய இலக்கம்.

**கே. ஏ. திலகரத்ன,**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:

1. சனாதிபதி செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்.